சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி


சனிக்கிழமை
29 பிப்ரவரி 2020
சென்னை
20 பக்கங்கள் ரூ.7

STELLA MARIS COLLEGE
Autonomous
Library
Chennai - 600 086.



# இணையக் குற்றங்களைத் தடுக்க போதுமான சட்டங்கள் இல்லை

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி



சென்னை ஸ்டெல்லா மேரி மகளிர் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி. உடன் (இடமிருந்து) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக குற்றவியல் துறை பேராசிரியர் மாதவ சோமசுந்தரம், பாதிக்கப்பட்டோருக்கான நலச் சங்க நிறுவனர் கே.சொக்கலிங்கம், யுனிசெஃப் அமைப்பின் பினாகி சக்கரவர்த்தி, சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறை பேராசிரியர் எம்.ஸ்ரீனிவாசன், உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி எஸ்.விமலா, சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் பி.துரைசாமி, ஸ்டெல்லா மேரி மகளிர் கல்லூரியின் முதல்வர் ரோஸி ஜோசப், தில்லி தேசிய சட்டக் கல்லூரி பதிவாளர் ஜி.எஸ்.பாஜ்பாய்.

**சென்னை, பிப். 28:** தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் சைபர் குற்றங்களைத் தடுக்க நமது சட்டம் போதுமானதாக இல்லை என சென்னைஉயர்நீதிமன்றதலைமை நீதிபதி ஏ.பி.சாஹி கூறினார்.

சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குற்றச் செயல்களால் பாதிக்கப்படுவோர் நலன் குறித்த சர்வதேச கருத்தரங்கை தொடங்கிவைத்து நீதிபதி ஏ.பி.சாஹி பேசியதாவது:

நீதி பரிபாலத்தின் முக்கியப் பணியே உண்மையை வெளிக்கொண்டு வருவதுதான். இந்த நடைமுறை மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். இன்றைய நவீன உலகில், பல்வேறு குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர், எந்தவித நெருக்கடிகளுக்கும் ஆளாகாமல் பயமின்றி நடந்த உண்மையை தெரிவிக்கும் வகையிலான பயமற்ற சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

அந்த வகையில், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் குழந்தைகள், நடந்த உண்மையை, ஆதாரங்களை பயமின்றி தெரிவிக்கும் வகையில் தனிப் பிரிவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு குற்றச் செயல்களால் பாதிக்கப்படுபவர்கள் அல்லது பழிவாங்கப்படுபவர்களின் நலன் குறித்து விவாதிக்கும் நாம், மதிப்பீடுகள், நன்னெறி குறித்தும் விவாதிக்க வேண்டும்.

மக்கள் இன்றைக்கு பலவகைகளில் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக வீடுகளில் நடைபெறும் குற்றச் செயல்களால் பாதிப்பு, பணிபுரியும் இடங்களில் பாதிப்பு என பல வகைகளில் பாதிக்கப்படுகின்றனர். எனவே இதற்கு ஒரு பொதுவான அல்லது தனிப்பட்ட முடிவின் மூலம் தீர்வு கண்டுவிட முடியாது. ஏனெனில், சமூகத்தில் மதிப்பீடுகள் மற்றும் நெறிமுறைகள் மீதான ஆர்வம் குறைந்ததுதான் இந்த நிலைக்கு முக்கியக் காரணம்.

முந்தைய காலங்களில் நன்னெறி வகுப்புகள் நமக்கு கட்டாயமாக இருந்தன. ஆனால் இன்றைக்கு,அதுவிருப்பத்தேர்வுபாடமாக கூட வைக்கப்படவில்லை. ஒருவருடைய மனதில் வன்முறை எண்ணம் சூழ்ந்து கொள்ளும் போது, அவர் தன்னையே மறந்துவிடுகிறார். இதை நன்னெறி மற்றும் மதிப்பீடுகளைக் கற்றுத் தருவதன் மூலமே மாற்ற முடியும்.

அதுமட்டுமின்றி, இன்றைக்கு தொழில்நுட்பமும் அபார வளர்ச்சி பெற்று வருகிறது. தொலைபேசிகள் இருந்த நிலை மாறி, கணினிகள், மடிக் கணினி, கையடக்க செல்லிடப்பேசிகள் என தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

இந்த வளர்ச்சி நமக்கு பல நன்மைகளைத் தரும்போதும், அதே அளவுக்கு தீமைகளையும் தருகிறது.

இதுபோன்ற தொழில்நுட்ப வளர்ச்சிகள் மூலம் ஏற்படும் குற்றங்களைத் தடுக்க அல்லது உரிய தண்டனையைப் பெற்றுத்தர நம்முடைய சட்டங்கள் போதுமானவையாக இல்லை. குறிப்பாக இந்திய ஆதாரச் சட்டம் நம்மிடம் இருக்கிறபோதும், நமது நாடாளுமன்றமும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேவையான வழிமுறைகள் வகுக்காததால், இந்த இணைய குற்றங்களுக்குத் தேவையான மின்னணு ஆதாரங்களைப் பெறுவதில் அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது. இதுகுறித்தும் இந்த கருத்தரங்கில் விவாதித்து, உரிய தீர்வு கிடைக்க வழி செய்யவேண்டும் என்றார் நீதிபதி சாஹி.